**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. I**

**DINDIGUL.**

**C.C.No. 149/2020**

**Prosecution Witness : 4**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாலசுப்பரமணி | **Caste** | : |
| **Father's Name** | : பழனிச்சாமி | **Calling** | : நகர் வடக்கு - காவல் நிலையம் தலைமைக் காவலர் |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : 40 |
| | | **Dated** | : 18.11.2025. |

**18.11.2025.**

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி– 9 திரு. **பாலசுப்பரமணி** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு அ.சா. 4 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**1 ம் எதிரி ஆஜர்**

**2, 3 எதிரிகள் ஆஜரில்லை. 355 BNSS Petition filed and allowed.**

1. நான் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையத்தில் தலைமைக் காவலராக பணி புரிந்து வருகிறேன், இதற்கு முன்பு திண்டுக்கல் தாலுகா

காவல் நிலையத்தில் முதல் நிலை காவலாரக பணிபுரிந்து வந்தேன். கடநத் 13.10.2019 ம் தேதி 20 மணிக்கு திண்டுக்கல் காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு சென்று சிகிச்சையில் இருந்த தங்கப்பாண்டி என்பவரை பார்த்த போது அவர் மயக்க நிலையில் இருந்ததால் மீண்டும் 14.10.2019 ம் காலை 10 மணிக்கு மருத்துவமனை சென்று அவரை விசாரித்தபோது அவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண்.598/2019 U/s.294 (b), 323, 324, 506 9 (i) of IPC ன் படி முதல் தகவல் அறிக்கை தயார் செய்தேன். புகாரையும் முதல் தகவல் அறிக்கையும் கணம் குற்றவியல் நீதிமன்றம் எண்.1 ற்கு அனுப்பி வைத்தேன். வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக சார்பு ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார். முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது,

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

இந்த வழக்கின் முதல் தகவல் அறிக்கை காலம் எண்.3 A வில் குற்ற நிகழ்வு நாள் 13.10.2019 நேரம் 16.30 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதே போல் காலம் 3 B யில் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.10.2019 நேரம் 11 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இடைப்பட்ட 19 மணிநேர காலதாமதத்திற்காக முறையான தகவல் முதல் தகவல் அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். காலம் எண்.14 ல் புகார் கொடுக்கப்பட்ட நபரின் கையொப்பம் முறையாக பெறப்படவில்லை என்றால் சரிதான். 13.10.2019 ல் நான் மருத்துவமனைக்கு சென்றதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள நிலையில் அங்கு வேறு ஏதும் நபரை விசாரணை செய்தேனா என்றால் இல்லை. நான் அங்கு சென்றதற்கான வேறு ஏதும் ஆதாரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதேபோல காயம் பட்டதாக சொல்லப்படும் தானாக இருசக்கர வாகனத்தில் மருத்துவமனைக்கு சென்றதாகதான் புகாரிலும் முதல் தகவல் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் புகார் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

முறையாக புலன் விசாரணை செய்யாமல் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

PACKIARAJ Digitally signed by PACKIARAJ Date: 2025.11.18 20:09:18 +0530

Judicial Magistrate No.I

Dindigul.